## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

அரச மருந்தாக்கல் உற்பத்தி கூட்டுத்தாபனத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கூட்டுத்தாபனத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கூட்டுத்தாபனத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கூட்டுத்தாபனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு சங்கம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கூட்டுத்தாபனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கூட்டுத்தாபனத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில்

குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மன்றத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கூட்டுத்தாபனத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கல்லூரி இணங்கியிருந்ததா என்பதும்,

- கூட்டுத்தாபனத்தின் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- கூட்டுத்தாபனத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

### 1.5.1 பெறவேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அரச மருந்தாக்கல் உற்பத்தி கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்டிருந்த மருந்துகளுக்காக ஒரு ஆண்டிற்கு மேற்பட்ட காலமாக கிடைக்க | சகல கடன்பட்டோரினதும் காலஎல்லையை விஞ்சிய பட்டியல்களை தீர்த்து வைப்பதற்கு 2023 ஆம் ஆண்டின் போது அதிக | நிலுவை பணத்தை அறவிடுவதற்காக தொடர்ச்சியாக பின்தொடர் நடவடிக்கைகள் |

| | | |
|---|---|---|
| வேண்டிய மீதியான ரூபா 14,030,172 பெறுமதி ஒன்று மே 29 ஆம் திகதி வரையிலும் அறவிடுவதற்கு தவறியிருந்தது. | முயற்சி எடுப்பதற்கு எதிர்பார்க்கின்றோம். | மேற்கொள்ளப்படல் வேண்டும். |

### 1.5.2 செலுத்தவேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மூலப் பொருட்களை வழங்கியதற்காக 04 கூட்டு முயற்சி வியாபாரங்களுக்காக 2022 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய மீதி ரூபா 3,593,491,982 ஆக இருந்ததுடன், அதனிடையே ரூபா 2,080,068,385 தொகை அதாவது 58 சதவீத அளவான அங்கீகரிக்கப்பட்ட கடனை செலுத்துவதற்காக அவகாசம் வழங்கப்பட்ட 50 நாள் காலத்தை விஞ்சியிருந்தது. | எமது நிறுவனத்திற்கு திறைசேரியில் இருந்து பணம் கிடைக்காமையின் அடிப்படையில் கூட்டு முயற்சிகளுக்கு செலுத்துவதற்கான இயலுமை காணப்படாமையின் காரணமாக பணத்தை செலுத்தும் காலம் 50 நாட்களை விஞ்சியிருந்தது. | கடன்கொடுத்தோர் குறித்துரைத்த காலத்தில் முறையாக தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 1983 இன் 12 ஆம் இலக்க பணிக் கொடைச் சட்டத்தின் 06(2)(அ) பிரிவு | ஊழியர் முழுமையாக சேவையாற்றிய ஒவ்வொரு வருடங்களுக்காகவும் அரை மாத சம்பளம் அல்லது வேதனத்தை அடிப்படையாகக் கொண்டு ஊழியர் பணிக் கொடை ஒதுக்கீடுகள் மேற்கொள்ள வேண்டிய போதிலும், அதற்குப் பதிலாக ஊழியரின் முழு மாத சம்பளத்தையும் அடிப்படையாகக் கொண்டு ஊழியர் பணிக் கொடை ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன . அதன் காரணமாக மீளாய்வாண்டின் போது ஓய்வு பெற்றுச் சென்ற 05 உத்தியோகத்தர்களுக்கு | சகல கொடுப்பனவுகளும் உள்ளடக்கிய நிதிசார் கைநூல் பணிப்பாளர் சபையின் மூலம் அங்கீகரிக்கப்பட்டமை யால் அதன் பிரகாரம் கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது. | சட்டத்தின் உரிய பிரிவுகளில் காணப்படுகின்ற ஏற்பாடுகளுக்கு இணங்க ஊழியர் பணிக் கொடைகளை ஒதுக்குவதற்கும் செலுத்துவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பணிக் கொடை படியாக ரூாப 2,050,793 தொகை அதிகரித்து செலுத்தப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப் பிரமாணம் 388 | தபாலில் அனுப்பப்படுகின்ற சகல காசோலைகள் தொடர்பான விபரங்களை உள்ளடக்கிய பதிவேடு பேணிச்செல்லப்பட வேண்டிய போதிலும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தபாலில் அனுப்பப்படுகின்ற சகல காசோலைகள் தொடர்பான விபரங்களும் அடங்கிய பதிவேடொன்று தற்போது கணனியில் பேணிச் செல்லப்படுகின்றது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 1997 பெப்ரவரி 03 ஆம் திகதிய இலக்கம் 6/97 என்ற அரச நிர்வாக சுற்றறிக்கையின் 2 ஆம் பந்தி | பதிற்கடமைக் காலம் 3 மாதங்கள் அதி உச்ச அளவின் கீழாக இருக்க வேண்டிய போதிலும், பிரதி பொது முகாமையாளர் பொருட்கள் மற்றும் ஆராய்ச்சி பதவிக்காக தொடர்ச்சியாக 05 வருடங்களுக்கு மேற்பட்ட பதிற்கடமை அடிப்படையில் ஊழியர் ஒருவர் சேர்க்கப்பட்டிருந்தார். | வெற்றிடங்களை நிரப்புவதற்காக பல சந்தர்ப்பங்களின் போது விண்ணப்பம் கோரப்பட்ட போதும் பதவிக்கு பொருத்தமான விண்ணப்பதாரர் முன்வந்திருக்கவில்லை . தற்போது ஆட்சேர்ப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக பொது முயற்சிகள் திணைக்களத்தின் (PED) அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | 2008 திசெம்பர் 31 ஆம் திகதிய இலக்கம் 30/2008 என்ற அரச நிர்வாக சுற்றறிக்கை | ஒரு உத்தியோகத்தருக்கு செலுத்துக் கூடிய ஆகக் கூடிய இடர் கடன் தொகை ரூபா 250,000 இற்கு வரையறுக்க வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் போது 49 உத்தியோகத்தர்களுக்கு அந்த எல்லையை விஞ்சி ரூபா 4,677,100 செலுத்தப்பட்டிருந்தது. | சகல கொடுப்பனவுகளும் உள்ளடக்கிய நிதிசார் கைநூல் பணிப்பாளர் சபையின் மூலம் அங்கீகரிக்கப்பட்டமையால் அதன் பிரகாரம் கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது. | கூட்டுத்தாபனத்திற்கு உரித்தான தாபன விதிக் கோவையொன்று தயாரித்து திறைசேரி அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ளும் வரை இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தாபன |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | விதிக் கோவை மற்றும் அரச நிர்வாக சுற்றறிக்கைகள் உரித்தாக்கப்படல் வேண்டும். சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்க செலுத்துதல் வேண்டும். |
| (உ) | 2022 திசெம்பர் 21 ஆம் திகதிய பீஈடீ 09/2022 என்ற பொது முயற்சிகள் சுற்றறிக்கை. | வருடாந்தம் ரூபா 20,000 மிகை ஊதியப் படியொன்று மாத்திரம் செலுத்த முடியுமாக இருந்த போதிலும், அங்கீகரிக்கப்பட்ட எல்லையை விஞ்சி ரூபா 3,130,193 மிகை ஊதியப் படியொன்று செலுத்தப்பட்டிருந்தது. | சகல கொடுப்பனவுகளையும் உள்ளடக்கிய நிதிசார் கைநூல் பணிப்பாளர் சபையின் மூலம் அங்கீகரிக்கப்பட்டுள்ள மையால் ஊழியர்களை தொடர்ந்தும் ஊக்குவிப்பதற்காக இந்த விஷேட மிகை ஊதியப் படி வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிராகரம் மிகை ஊதியப் படி செலுத்துதல் வேண்டும். |
| (ஊ) | 2022 ஏப்ரல் 26 ஆம் திகதிய 03/2022 ஆம் இலக்க தேசிய வரவு செலவு திட்ட சுற்றறிக்கையின் 03(X) | அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கின் கீழ் பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படுகின்ற கடன் வசதிகள் 2022 திசெம்பர் 31 ஆம் திகதி வரையும் கைவிட வேண்டியிருந்தமை அறிவிக்கப்பட்ட போதிலும், அதற்கு புறம்பாக 11 உத்தியோகத்தர்களுக்கு ரூபா 3,980,625 இடர் கடன் செலுத்தப்பட்டிருந்தது. | சகல கொடுப்பனவுகளையும் உள்ளடக்கிய நிதிசார் கைநூல் பணிப்பாளர் சபையின் மூலம் அங்கீகரிக்கப்பட்டுள்ள மையால் ஊழியர்களை தொடர்ந்தும் ஊக்குவிப்பதற்காக இந்த விஷேட மிகை ஊதியப் படி வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | நிதிசார் கைநூல் இன்றி உரிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கைகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (எ) | 2009 மார்ச் 09 ஆம் திகதிய டீஏஎம்எஸ்/ஈ4/10/4/090/2 என்ற சுகாதார போசணை மற்றும் | | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | சுதேச வைத்தியத்துறை அமைச்சின் செயலாளருக்கு முகவரியிடப்பட்ட முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் கடிதம் | | | | |
| (i) | 03 ஆம் பந்தி | அ. | வருகை ஊக்குவிப்பு படியாக மாதத்திற்கு ஒரு ஊழியருக்கு ரூபா 2,000 மாத்திரம் செலுத்துவதற்கு அங்கீகாரம் கிடைத்திருந்த போதிலும், அது ரூபா 3,500 வரை அதிகரித்து செலுத்தப்பட்டிருந்தது. | சகல கொடுப்பனவுகளையும் உள்ளடக்கிய நிதிசார் கைநூல் பணிப்பாளர் சபையின் மூலம் அங்கீகரிக்கப்பட்டமையால் அதன் பிரகாரம் கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது. | பணிப்பாளர் சபை தீர்மானத்தை அமுல்படுத்துவதற்கு முன்னர் உரிய சந்தார்ப்பத்தின் போது முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறப்படல் வேண்டும். |
| | | ஆ. | வருகை ஊக்குவிப்பு படி செலுத்துவதாயின் ஆண்டின் இறுதியில் மிகுதியான விடுமுறைகளுக்காக பணம் செலுத்த முடியாதிருந்த போதிலும், வருகை ஊக்குவிப்பு படி செலுத்தப்பட்ட ஊழியர்களுக்காக மீளாய்வாண்டின் இறுதியில் எஞ்சிய விடுமுறைகளுக்காகவும் ரூபா 11,960,822 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | சகல கொடுப்பனவுகளையும் உள்ளடக்கிய நிதிசார் கைநூல் பணிப்பாளர் சபையின் மூலம் அங்கீகரிக்கப்பட்டமையால் அதன் பிரகாரம் கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது. | பணிப்பாளர் சபை தீர்மானத்தை அமுல்படுத்துவதற்கு முன்னர் உரிய சந்தார்ப்பத்தின் போது முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறப்படல் வேண்டும். |
| (ii) | 04 ஆம் பந்தி | | புத்தாண்டுகள் மற்றும் நத்தாருக்காக ஆண்டிற்கு ஒருவருக்கு ஒரு தடவை மாத்திரம் ரூபா 6,000 பரிசு உறுதிச்சீட்டு வழங்க முடியுமாக இருந்த போதிலும், மீளாய்வாண்டின் போது நிரந்தர ஊழியர்களுக்கு ரூபா 25,000 வீதம் மற்றும் பயிற்சி | சகல கொடுப்பனவுகளையும் உள்ளடக்கிய நிதிசார் கைநூல் பணிப்பாளர் சபையின் மூலம் அங்கீகரிக்கப்பட்டமையால் அதன் பிரகாரம் கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது. | பணிப்பாளர் சபை தீர்மானத்தை அமுல்படுத்துவதற்கு முன்னர் உரிய சந்தார்ப்பத்தின் போது முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ஊழியர்களுக்கு ரூபா 12,500 வீதம் மொத்த கிரயம் ரூபா 7,392,062 ஆன பரிசு உறுதிச் சீட்டுக்களும், அதற்கு மேலதிகமாக பாடசாலை புத்தகங்கள் மற்றும் உபகரணங்களை கொள்வுனவு செய்வதற்கு நிரந்தர ஊழியர்களுக்கு ரூபா 12,500 வீதமும், ஏனைய ஊழியர்களுக்கு ரூபா 6,250 வீதமும் மொத்த கிரயம் ரூபா 5,087,500 ஆன பரிசு உறுதிச்சீட்டுக்கள் வழங்கப்பட்டிருந்தன. | | பெறப்படல் வேண்டும். |
| (iii) | 06 ஆம் பந்தி | எதாவது ஒரு ஊழியருக்கு குறித்துரைத்த சேவை தடவைகள் யாவும் வருகை தந்திருந்தால் மாத்திரம் ரூபா 1,000 மாதாந்த படியொன்று செலுத்த முடியுமாக இருந்த போதிலும், பங்குபற்றிய ஒவ்வொரு சேவை தடவைகளுக்காகவும் நிறைவேற்று, பயிற்சி போன்ற நிறைவேற்று மற்றும் நிறைவேற்று அல்லாத ஊழியர்களுக்கு முறையே ரூபா 400, ரூபா 300 மற்றும் ரூபா 200 வீதம் ஆன வகையில் மீளாய்வாண்டின் போது ரூபா 6,399,800 தொகை சேவை தடவை படியாக செலுத்தப்பட்டிருந்ததுடன், மேலதிகமாக செலுத்தப்பட்ட சேவை தடவைகள் படி ரூபா 3,326,800 ஆகும். | சகல கொடுப்பனவுகளையும் உள்ளடக்கிய நிதிசார் கைநூல் பணிப்பாளர் சபையின் மூலம் அங்கீகரிக்கப்பட்டமை யால் அதன் பிரகாரம் கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது. | பணிப்பாளர் சபை தீர்மானத்தை அமுல்படுத்துவதற்கு முன்னர் உரிய சந்தார்ப்பத்தின் போது முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறப்படல் வேண்டும். |
| (ஏ) | 2015 யூன் 04 ஆம் திகதிய BP/30/15 மற்றும் 2022 செப்டம்பர் 22 ஆம் | கூட்டுத்தாபனத்தின் ஊழியர்களுக்காக செலுத்தப்படுகின்ற துவிச்சக்கர வண்டி கடன் | சகல கொடுப்பனவுகளையும் உள்ளடக்கிய நிதிசார் கைநூல் பணிப்பாளர் | திறைசேரி அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்கு |

| | | | |
|---|---|---|---|
| திகதிய இலக்கம் BP/62/22 என்ற பணிப்பாளர் சபை தீர்மானம் | 2015 யூன் 04 ஆம் திகதி முதல் ரூபா 3,000 முதல் ரூபா 75,000 வரை அதிகரிக்கப்பட்டிருந்த போதும் அதற்காக பெற்றுக்கொள்ள வேண்டிய திறைசேரி அங்கீகாரம் இது வரையும் பெறப்பட்டிருக்கவில்லை. | சபையின் மூலம் அங்கீகரிக்கப்பட்டமை யால் அதன் பிரகாரம் கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது. | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 965,472,451 இலாபமாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 1,006,185,465 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 40,713,013 அதாவது 4.05 சதவீத வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்சிசிக்கு விற்பனை மற்றும் விநியோக செலவினம் 333 சதவீதத்தினாலும், வரிச் செலவினம் 171 சதவீதத்தினாலும் அதிகரித்தமை பிரதான காரணங்களாக இருந்தன.

### 2.2 பிரதான செலவின விடயங்களின் முக்கிய பகுப்பாய்வு

கடந்த ஆண்டு மற்றும் மீளாய்வாண்டின் விற்பனை மற்றும் விநியோக செலவினங்கள் முறையே ரூபா 109,186,789 மற்றும் ரூபா 472,762,064 ஆக இருந்ததுடன், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் அந்த செலவினம் 333 சதவீத்தினால் அதிகரித்திருந்தது. அதில் உள்ளடக்கப்பட்ட மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 312,417,918 அறவிட முடியாக் கடன் ஒதுக்கம் அதற்கு பிரதான காரணமாக இருந்தது.

### 2.3 விகிதாசாரப் பகுப்பாய்வு

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் மொத்த இலாப விகிதம் மற்றும் தேறிய இலாப விகிதம் முறையே 4.4 சதவீதத்தினாலும், மற்றும் 05 சதவீதத்தினாலும் குறைந்திருந்ததுடன், கடன்பட்டோர் புரள்வு விகிதம் 16 தடவைகள் குறைவாகவும், கடன் அறவிடும் காலம் 17 நாட்கள் அதிகரித்தும் காணப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நடைமுறையல்லா சொத்துக்களில் உள்ளடக்கப்பட்ட கிரயம் ரூபா 21,962,722 ஆன 82 விடயங்கள் மீளாய்வாண்டிற்காக மேற்கொள்ளப்பட்ட பௌதீக மெய்மெய்யாய்விற்கு | குறைபாடுகளை சரிசெய்து 2023 ஆம் ஆண்டில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும். | கூட்டுத்தாபனத்தின் சகல நடைமுறையல்லா சொத்துக்களும் பௌதீக மெய்மெய்யாவிற்கு உட்படுத்த வேண்டி இருந்ததுடன், பற்றாக்குறை |

| | | | |
|---|---|---|---|
| | உட்படுத்தப்படாதிருந்ததுடன், இந்த விடயங்கள் பற்றாக்குறையாகவும் காண்பிக்கப்பட்டிருக்க வில்லை. | | மற்றும் மிகைகளை இனங்கண்டு அறிக்கையிடல் வேண்டும். |
| (ஆ) | நிலையான சொத்துக்களை இனங்காணும் போது எந்த வகையிலான சொத்தொன்று நிலையான சொத்தாக இனங்காண வேண்டும் என்பது தொடர்பான கொள்கையொன்று கூட்டுத்தாபனத்திடம் காணப்படவில்லை. | கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான சகல சொத்து தொகுதிகளையும் இனங்காணும் சகல குறிகாட்டிகள் பரிந்துரை செய்யப்பட்டு ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களுக்கான கொள்கையொன்று 2023 ஆம் ஆண்டின் போது அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | பொறிகள் மற்றும் உபகரணங்களுக்கான கொள்கையொன்று 2023 ஆம் ஆண்டின் போது அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கடன்கொடுத்தோர் இருவரின் மீதி, நேர் மீதிகளை உறுதிப்படுத்தும் மீதிகளுடன் இணக்கம் செய்யப்படாதிருந்ததுடன், கடன்கொடுத்தோர் மீதி ரூபா 1,285,995 இனால் குறைவாக மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. | உறுதிப்படுத்தல் மீதிகளை சரியாக காண்பிக்காமை மற்றும் செலுத்துவதற்கு உள்ளதாக குறிப்பிடப்பட்ட பட்டியல்கள் இது வரையும் கூட்டுத்தாபனத்திற்கு கிடைத்திருக்கவில்லை. | ஆண்டின் இறுதியின் போது செலுத்த வேண்டிய மீதிகளுக்குரிய மீதி உறுதிப்படுத்தகளை சரியாக பெற்றுக் கொள்வதற்கு நடிவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | விற்பனை மற்றும் மாதாந்த உற்பத்தி திட்டம் என்பவற்றின் பிரகாரம் இனங்காணப்பட்ட மொத்த உற்பத்தி தேவைகளுக்கு இடையே 71 வகையான மருந்து வகைகளில் 777.576 மில்லியன் அலகுகள் வேறுபாடு காணப்பட்டது. | அநேகமான மாதங்களில் 10 சதவீதம் ஆண்டின் 09 மாதங்களில் இலக்கு அடையப்பட்டுள்ளது. 25 சதவீதம் சகல மாதங்களிலும் இலக்கு பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. மருத்துவ வழங்கல் பிரிவின் கோரிக்கைகளுக்கு ஈடுசெய்யும் வகையில் | வருடாந்த விற்பனை திட்டத்தின் இலக்கினை அடைந்து கொள்வதற்கு ஆகக் கூடிய முயற்சி எடுக்க வேண்டியிருந்தது டன், மாதாந்த |

| | | | |
|---|---|---|---|
| | | கூட்டுத்தபானத்தின் மருந்து உற்பத்தி போதியளவாக இருந்த போதிலும், சில மருந்துகள் தொடர்பாக மருத்துவ வழங்கல் பிரிவின் ஒட்டுமொத்த கோரிக்கையையும் பூர்த்தி செய்வதற்கு முடியாதிருந்தது. | உற்பத்தி திட்டமும் பின்பற்றப்படல் வேண்டும். |
| (ஆ) | 2022 ஆம் ஆண்டிற்காக கூட்டுத்தாபனத்தின் விற்பனை பிரிவினால் வழங்கப்பட்ட விற்பனை திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட 29 வகையான மருந்துகளின் மொத்த தேவையான அலகுகள் 2,545.180 மில்லியன் அலகுகளாக இருந்ததுடன், அந்த 29 மருந்துகளில் மீளாய்வாண்டில் உள்ளபடியான உற்பத்தி அலகுகள் 1,408.081 மில்லியன் அலகுகளாக இருந்தமையால் உற்பத்தி தேவை மற்றும் உள்ளபடியான உற்பத்திகளுக்கு இடையே 1,137.099 மில்லியன் அலகுகள் பற்றாக்குறையை காணக்கூடியாக இருந்தது. | 2021 ஆம் ஆண்டின் போது நிறுவனம் மாத்திரை மற்றும் வில்லைகள் 3,043.5 மில்லியன் உற்பத்தி செய்யப்பட்டிருந்ததுடன், 2023 ஆம் ஆண்டின் போது அந்த மாத்திரை வில்லைகள் 3302.1 வரை அதிகரித்திருந்தது. 2022 ஆம் ஆண்டின் போது இலங்கையில் காணப்பட்ட பொருளாதார நெருக்கடியின் காரணமாக எதிர்வு கூறப்பட்ட மருந்து உற்பத்தி மற்றும் வழங்கல் திட்டங்களில் கணிசமான வேறுபாடுகள் ஏற்பட்டிருந்தது. | ஆகக் கூடிய உற்பத்தியை செயற்திறனாகவும், வினைத்திறனாகவும் உற்பத்தி செய்வதற்காக சாத்தியமுடைய உற்பத்தி மற்றும் விற்பனை திட்டங்கள் தயாரிக்கப்படல் வேண்டும். |
| (இ) | 2018 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டுகளுக்கு இடையிலான காலத்தில் ஒட்டுமொத்த விற்பனை வருமானம் ஒவ்வொரு ஆண்டுகளின் போது கூட்டுமுயற்சி உற்பத்திகளில் இருந்து கூட்டுத்தாபனத்தின் விற்பனைக்காக காண்பிக்கப்படுகின்ற பங்களிப்பு உயர்வடைந்திருந்ததுடன், கூட்டுத்தாபனத்தின் உற்பத்திகளில் கூட்டுத்தாபனத்தின் விற்பனைக்காக | அரச மருந்தாக்கல் உற்பத்தி கூட்டுத்தபானம் (SPMC) உடன் கூட்டு முயற்சி 2017 ஆம் ஆண்டின் இறுதியின் போதே ஆரம்பிக்கப்பட்டிருந்தது. இதன் போது அமைச்சரவை அங்கீகாரம் 15 பேர்களுக்காக கிடைத்திருந்த போதும் அதில் 2017 ஆம் ஆண்டில் ஒரு கூட்டு முயற்சியும், 2018 ஆம் ஆண்டில் 02 கூட்டு முயற்சிகளும் SPMC Logo இன் கீழ் | காணப்படுகின்ற உற்பத்தி இயலளவை அதிகரித்துக் கொள்வதற்காக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | காண்பிக்கப்படுகின்ற பங்களிப்பு வீழ்ச்சியடைந்திருந்தது. 2022 ஆம் ஆண்டினை கவனத்தில் கொள்ளும் போது கூட்டு முயற்சிகளில் ஒட்டுமொத்த வருமானத்திற்குமான பங்களிப்பு 52.34 சதவீதமும், கூட்டுத்தாபனத்தின் உற்பத்திகளில் இருந்து ஒட்டுமொத்த வருமானத்திற்கான பங்களிப்பு 47.66 சதவீதமும் ஆகும். | மருந்து வழங்கப்பட்டிருந்தது. 2023 ஆம் ஆண்டின் போதும் Sands Active ஊடாக மாத்திரைகள் மற்றும் வில்லைகள் உற்பத்தி செய்து வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்ததுடன் , 2024 ஆம் ஆண்டின் போது Sands Active மூலம் Cephelesporine மருந்து மற்றும் கொக்கல Premium ஊடாக insulin மருந்து வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்ததுடன் , அதன் பிரகாரம் கூட்டு முயற்சி ஊடாக விற்பனை வருமானத்தை மேலும் அதிகரிக்கக் கூடியதாக இருந்தது. | |
| (ஈ) | கூட்டுத்தாபனத்தால் உற்பத்தி செய்யப்பட்ட 15 வகையான மருந்துகள் உற்பத்தி கிரயத்தினை விட குறைவான விலை தீர்மானிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் போதும் அந்த மருந்துகள் அவற்றின் உற்பத்தி கிரயத்தினை விட குறைவாக விற்பனை செய்ததன் மூலம் ரூபா 230,054,679 நட்டத்தை கூட்டுத்தாபனத்திற்கு ஏற்க வேண்டி ஏற்பட்டிருந்தது. | கூட்டுத்தாபனத்தின் விற்பனை முகவர்கள் ஊடாக மேற்கொள்ளப்பட்ட அரச மருந்தாக்கல் உற்பத்தி கூட்டுத்தபானத்தின் (SPMC) மருந்துகளை விற்பனை செய்யும் போது அவற்றின் கிரயப் பகுப்பாய்வு சராசரியாக வருடத்திற்கு ஒரு தடவை மாத்திரமே செய்யப்பட்டிருந்ததுடன், அந்த சந்தர்ப்பத்தின் போது காணப்படுகின்ற கிரயத்தை அடிப்படையாகக் கொண்டு SPMC உற்பத்தியின் விலை திருத்தத்திற்கு உட்படுத்தப்பட்டிருந்தது. | கூட்டுத்தாபனத் திற்கு நட்டம் ஏற்படாத வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன், ஆகக் குறைந்த உற்பத்தி கிரயத்தை மேவுகை செய்யும் வகையில் விலை தீர்மானிக்கப்படல் வேண்டும். |
| (உ) | கூட்டுத்தாபனத்தால் உற்பத்தி செய்யப்படுகின்ற சில மருந்துகளின் விலைகளை தீர்மானிக்கும் போது அதன் உற்பத்தி கிரயத்தினை விட 26 சதவீதம் முதல் 81 சதவீதம் | சில உற்பத்திகளின் விலை எண்ணிக்கையை கவனத்தில் கொள்ளும் போது அந்த உற்பத்திகளின் கிரயத்தை கருதும் இடத்து உயர்ந்த இலாப விகிதத்தை | சமுதாய நலன்களையும் கவனத்தில் கொண்டு மருந்துகளின் விலை தீர்மானிக்கப்படல் |

| | | | |
|---|---|---|---|
| | வரை உயர்ந்த இலாபத்துடன் சேர்க்கப்பட்டிருந்தது. | காட்டியிருந்த போதிலும், இந்த உற்பத்திக்கான ஏனைய போட்டி உற்பத்தியாளர்களின் சந்தை விலை உயர்ந்த பெறுமதியை கொண்டிருந்தமையால் அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனத்தினால் நிர்ணயிக்கப்பட்ட விலை எண்ணிக்கையில் மருந்துகளை கொள்வனவு செய்தல் நுகர்வோருக்கு நலனாக இருந்தமை. | வேண்டும். |
| (ஊ) | மூலப்பொருள் கிடைக்காமை, இயந்திர இயலளவு போதியளவில் இல்லாமை, உற்பத்தி செயற்பாடுகளில் காணப்பட்ட தொழில்நுட்ப கோளாறுகள் போன்ற பல்வேறு காரணங்களின் அடிப்படையில் மருத்துவ வழங்கல் பிரிவினால் மீளாய்வாண்டிற்காக கட்டளையிடப்பட்ட மருந்துகளின் விற்பனை பெறுமதி ரூபா 723,571,830 ஆன 122.53 மில்லியன் மருந்து அலகுகளின் அளவை வழங்குவதற்கு கூட்டுத்தாபனம் தவறியிருந்தது. | தற்போது அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனம் JICA செயற்திட்டம் ஊடாக இரண்டாவது தடவையாக உற்பத்திக்கூட வசதிகளை விரிவுபடுத்தி உள்ளதுடன், ஊழியர்களின் ஆகக் கூடிய அர்ப்பணிப்பின் அடிப்படையிலும், புதிய உற்பத்திகளை சந்தைக்கு விநியோகிப்பதன் ஊடாக தற்போது உற்பத்திக்கூடத்தில் உச்ச உற்பத்தி இயலளவை அடைந்து கொள்ளக் கூடியதாக உள்ளது. | காணப்படுகின்ற இடையூறான நிலைமைகளை குறைத்து மருத்துவ வழங்கல் பிரிவின் கட்டளைகளை பூர்த்தி செய்வதற்கு ஆகக் கூடிய முயற்சி எடுத்து தமது சந்தைப் பங்கை பாதுகாத்துக் கொள்ளல் வேண்டும். |
| (எ) | மீளாய்வாண்டிற்காக மருந்துவ வழங்கல் பிரிவிற்கு வழங்கப்பட்டிருந்த விற்பனை பெறுமதி ரூபா 13,927,795,651 ஆன 2,969.65 மில்லியன் மருந்து அலகுகளுக்கு இடையே கூட்டுத்தாபனத்தின் உற்பத்திகளில் விற்பனை பெறுமதி ரூபா 5,365,222,678 ஆன 2,368.29 மில்லியன் மருந்து அலகுகள் மாத்திரமே | கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளது. | கூட்டுத்தாபனம் தமது உச்ச உற்பத்தியை செயற்திறனாக மேற்கொண்டு மிகவும் நலன் வாய்ந்த உற்பத்தி கலவையொன்றை தெரிவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வழங்கப்பட்டிருந்ததுடன், மிகுதி விற்பனை பெறுமதி ரூபா 8,562,572,974 ஆன 601 மில்லியன் மருந்து அலகுகள் கூட்டு முயற்சி வழங்குனர்களின் மூலம் வழங்கப்பட்டிருந்தது. எனினும் கூட்டு முயற்சி வழங்கிய மருந்து அலகுடன் ஒப்பிடும் போது அதிக மருந்து அலகுகளின் அளவை மருத்துவ வழங்கல் பிரிவிற்கு வழங்குவதன் மூலம் அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனத்திற்கு கணிசமான பங்களிப்பொன்று நாட்டிக்கு வழங்கப்பட்டிருந்தது. | | |
| (ஏ) | மேற்கொள்ளப்பட்ட தெரிவு பரிசோதனையின் பிரகாரம் விநியோகஸ்தர்களினால் விற்பனைக்காக கூட்டுத்தாபனத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட காசோலைகளுக்கு கொடுப்பனவுகள் நிறுத்தப்பட்டதன் காரணமாக 03 பட்டியல்களுக்குரிய ரூபா 1,915,999 பெறுமதியான காசோலை மதிப்பிழந்திருந்தது, அதன் பிரகாரம் விநியோகஸ்தர்களினால் சந்தை மட்டத்தை உரித்தாக்கிக் கொள்வதற்கும், அவர்களிடம் இருந்து உரிய நேரத்தில் பணத்தை அறவிடுவதற்கும் கூட்டுத்தாபனம் தவறியிருந்தது. | எதிர்காலத்தில் இவ்வாறான நிலைமைகளை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இவ்வாறான நிலைமைகளை குறைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஐ) | கூட்டுத்தாபனத்தால் மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த விற்பனை திட்டத்தில் உள்ளடக்கப்படாத பெறுமதி | மருத்துவ வழங்கல் பிரிவில் இருந்து கிடைத்த கட்டளை மற்றும் சந்தையின் கோரிக்கையின் பிரகாரம் இந்த | குறித்துரைத்த பிரகாரம் விற்பனைத் திட்டம் தயாரிக்கப்படல் |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 1,408.46 மில்லியன் ஆன 71.186 மில்லியன் அலகுகளை உள்ளடக்கிய மருந்துகள் மற்றும் 38 ஏனைய விடயங்கள் என்பன 2022 ஆம் ஆண்டில் விற்பனை செய்யப்பட்டிருந்தன. | விடயங்களில் உள்ளபடியான விற்பனை அளவு அவற்றின் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியில் முரண்பாடாகி இருந்தது. | வேண்டும். |
| (ஒ) | 2022 ஆம் ஆண்டின் போது 30 மருந்து வகைகளில் 351.907 மில்லியன் அலகுகள் விற்பனை இலக்கை அடைய முடியாதிருந்த போதிலும், அந்த மருந்துகளின் விலைகளில் ஏற்பட்ட மாற்றத்தால் விற்பனை திட்டத்தில் உள்ள வருமானப் பெறுமதியை விஞ்சி ரூபா 2,622.10 மில்லியன் உள்ளபடியான வருமான பெறுமதியொன்று அடையப்பட்டிருந்தது. | மூலப் பொருள் விலைகள் உயர்ந்து சென்றமையின் காரணமாக விலை எண்ணிக்கையை உயர்த்த வேண்டி ஏற்பட்டிருந்தது. 2022 ஆம் ஆண்டின் ஆரம்பத்தின் போது ரூபா 203 இற்கு காணப்பட்ட டொலர் விரைவாக அதிகரித்து ரூபா 380 வரை அதிகரித்திருந்தது. அதன் பிரகாரம் மூலப் பொருட்களை கொள்வனவு செய்வதற்காக எங்களுக்கு அதிக விலையொன்றை செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது, இவ்வாறு டொலர் அதிகரித்ததன் மூலம் மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் (NMRA) மூலம் பல சந்தர்ப்பங்களின் போது இந்த உற்பத்தியாளர்களின் ஆகக் கூடிய சில்லறை விலையை உயர்த்த வேண்டி ஏற்பட்டிருந்தது. | காணப்படுகின்ற நிலைமைக்கு இணங்க வேண்டியிருந்ததுடன், பொது மக்கள் நலன்களையும் கவனத்தில் கொள்ளல் வேண்டும். |
| (ஓ) | 2022 யூலை மாதம் முதல் 2022 திசெம்பர் மாதம் வரையான காலத்தில் கூட்டுத்தாபனத்தால் 48 விநியோகஸ்தர்களுக்கு இடையே 16 பேர்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 101,456,371 பெறுமதியான விற்பனை இலக்கை அடைந்து கொள்ளமுடியாதிருந்தது. | மருந்து உற்பத்தி கூட்டுத்தாபனத்தால் விநியோகிப்பவர்களுக்காக வழங்கப்பட்ட ஆகக் குறைந்த மாதாந்த விற்பனை இலக்கு ரூபா இரண்டு மில்லியன் ஆக இருந்த போதும் அரச மருந்தாக்கல் உற்பத்தி கூட்டுத்தாபனத்தின் வரையறுக்கப்பட்ட உற்பத்தி வசதிகளின் | உற்பத்தி இயலளவை அதிகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | காரணமாக உற்பத்தியின் போது மருத்துவ வழங்கல் பிரிவு (MSD) கட்டளைக்காக முன்னுரிமை வழங்கப்பட்டமையால் திறந்த சந்தை கோரிக்கைகளை பூர்த்தி செய்வதற்காக விற்பனை பிரிவிற்கு மிகவும் வரையறுக்கப்பட்ட இருப்பு அளவு மாத்திரமே வழங்கப்பட்டிருந்தது. | |
| (ஔ) | விற்பனை பிரிவு விநியோகித்த சில பட்டியல்களுக்காக அங்கீகாரம் பெறப்படாதிருந்ததுடன், சில பட்டியல்களை பரீட்சித்து கையொப்பமிடப்படாதிருந்த போதும் அவை அங்கீகரிக்கப்பட்டிருந்தது. | விற்பனை பிரிவில் வரையறுக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை இருந்தமையால் பட்டியல்களை பரீட்சிப்பதற்கு முடியாதிருந்தது. | சகல பட்டியல்களையும் பரீட்சிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.3 பெறுகைகள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது ரூபா 492,452,048 செலவில் மருந்து மூலப் பொருட்களை கொள்வனவு செய்யும் 06 சந்தர்ப்பங்களின் போது அரசாங்கத்தின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.2.1 மற்றும் 4.2.3 இன் பிரகாரம் பெறுகைகள் நிறுவனத்தினால் பெறுகைத் திட்டம் மற்றும் பெறுகை கால அட்டவணை என்பன தயாரிக்கப்படாதிருந்ததுடன், பொது ஒப்பந்த சட்டத்தின் கீழ் ஒப்பந்த பதிவு சான்றிதழ் வழங்குனர்களிடம் இருந்து பெறப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வில் சுட்டிக் காட்டப்பட்ட முறையில் பெறுகைத் திட்டம் மற்றும் பெறுகை கால அட்டவணை பெறுகை கோவைகளில் உள்ளடக்கி தற்போது மேற்கொள்ளப்படுகின்றது. | அரசாங்கத்தின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்தது டன், பெறுகைக் குழு பரிந்துரைகளை போன்று கட்டளை நிபந்தனைகளுக்கு ம் இணங்கியதன் பின்னர் பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2020 ஆம் ஆண்டில் கொவிட் 19 தொற்று நோய் உக்கிரமடைந்து சென்ற காலத்தில் மருந்து வழங்கல் பிரிவின் ஆலோசனையின் படி பெறுகைகள் மேற்கொள்ளப்பட்ட ரூபா 6,698,610 ஆன Chloroquine Phosphate BP மூலப் பொருள் விடயங்களில் 600 அலகுகளின் ஆயுட்காலம், மருந்து மூலப் பொருள் களஞ்சியத்திற்கு கிடைத்த திகதியில் இருந்து 02 வருடங்களை விஞ்சியிருந்தது. 2025 மார்ச் 31 ஆம் திகதி அளவில் இந்த மூலப் பொருட்கள் இருப்பு காலாவதியாகுவதற்கு இருந்ததுடன், கணக்காய்வு திகதி வரையிலும் இந்த இருப்பிற்காக மீள் ஏற்றுமதி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு முடியாதிருந்தது. | Covid – 19 தொற்று நோய்க்காக Chloroquine Phosphate மருந்தை பயன்படுத்துவதற்கு பரிந்துரை செய்வதற்கும், கம்பனி இந்த Chloroquine Phosphate மூலப் பொருளை மருந்துவ வழங்கல் பிரிவின் ஆலோனையின் படி 600kg அளவு விரைவாக பெறுகை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. எனினும், எதிர்பார்க்கப்பட்ட முறையில் இந்த மருந்துகள் பயன்படுத்தப்படாமையினால் இந்த இருப்பை பயன்படுத்துவதற்கு முடியாதிருந்தது. | இந்த மருந்து இருப்பு காலாவதியாகுவதற்கு முன்னர் மீண்டும் மீள் ஏற்றுமதி செய்தவற்கோ அல்லது உற்பத்தி செய்த மருந்துகள் அல்லது மூலப் பொருள் இருப்பை உள்நாட்டு அல்லது வெளிநாட்டு தரப்பினருக்கு தேவையாயின் கூடிய விரைவில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | மருத்துவ வழங்கல் பிரிவில் இருந்து கிடைத்த Cloxacillin Sodium BP 250mg கட்டளைக்காக கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 1,261,032 பெறுமதியான DHS முத்திரை இடப்பட்ட வெற்று மாத்திரை இருப்பு (E/H Gelatin caps No 1 Brigh Orange/Black) மருத்துவ வழங்கல் பிரிவினால் முன் அறிவித்தல் இன்றி கட்டளை கைவிடப்பட்டதன் காரணமாக இந்த இருப்பு மெதுவாக அசைவதுடன், கணக்காய்வு திகதியில் இந்த இருப்பு காலாவதியாகி இருந்தது, | DHS முத்திரை இடப்பட்டமையால் வெற்று மாத்திரை இருப்பை திறந்த சந்தைக்காக Cloxacillin Sodium BP 250mg உற்பத்திசெய்து பயன்படுத்த முடியாமையின் காரணமாக இந்த இருப்பு காலாவதியாகும் வரை பயன்பாட்டிற்கு எடுக்க முடியாதிருந்தது. தற்போது காலாவதியாகி உள்ளமையால் எதிர்காலத்தில் முறையான பிரகாரம் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன், இவ்வாறான இழப்புகளை தவிர்த்துக் கொள்ளும் நோக்கில் இந்த சம்பவத்தின் பின்னர் DHS முத்திரை இடப்பட்ட | ஏற்படுகின்ற இழப்புக்களை குறைப்பதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | வெற்று மாத்திரை கட்டளை இடல் மேற்கொள்ளப்படுவதில்லை. | |

## 3.4 கூட்டுமுயற்சி முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| உள்நாட்டு மருந்து உற்பத்தி செயற்பாடுகளை விரிவுபடுத்துவதற்காக அரச மருந்தாக்கல் உற்பத்தி கூட்டுத்தாபனம் மற்றும் பொருத்தமான தனியார் முதலீட்டாளருக்கு இடையே கூட்டு முயற்சி ஆரம்பிப்பதற்கான முன்மொழிவின் கீழ் கூட்டுத்தாபனத்தால் 17 முதலீட்டாளர்களுடன் மருந்து வகைகளை வழங்குவதற்காக 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளின் போது உடன்படிக்கை செய்யப்பட்டிருந்த போதிலும், கணக்காய்வு திகதி வரையிலும் 15 கூட்டு முயற்சியாளர்கள் மாத்ரிரம் கூட்டுத்தாபனத்துடன் தொடர்பு கொண்டிருந்தனர். மீளாய்வாண்டின் போது அந்த கூட்டு முயற்சியுடன் கூட்டுத்தாபனம் கொடுக்கல் வாங்கலை மேற்கொண்ட முறை தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |
| (i) 15 முதலீட்டாளர்களுடன் மருந்து வழங்கல்களுக்காக உடன்படிக்கை செய்யப்பட்டிருந்த போதிலும். 2022 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் ஆறு முதலீட்டாளர்களிடம் இருந்து மாத்திரம் மருந்துகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. | இந்த 15 முதலீட்டாளர்களிடம் இருந்தும் மருத்துவ வழங்கல் பிரிவிற்கு மருந்துகளை வழங்குவதற்கு உற்பத்திக்கூட வசதிகள் மற்றும் தகைமைகளை அடைந்த ஆறு முதலீட்டாளர்கள் மாத்திரம் இருந்தனர். | அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட குழுவினால் பரிந்துரை செய்யப்பட்ட பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன், உடன்படிக்கை செய்த ஏனைய முதலீட்டாளர்களின் நிலைமை தொடர்பான தொடர்ச்சியாக பின்தொடர் |

நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

(ii) கூட்டு முயற்சி வழங்கல்களுக்காக கொள்வனவு விலையில் 06 சதவீத இலாப வீதம் சேர்க்கப்பட்டு மருத்துவ வழங்கல் பிரிவிற்கு மருந்துகள் வழங்கப்படுவதாக கணக்கீட்டு கொள்கை நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்ட போதிலும், மேற்கொள்ளப்பட்ட தெரிவு பரிசோதனையின் பிரகாரம் அது அவ்வாறு இல்லாதிருந்தமை உடன்படிக்கை செய்யப்பட்ட முதலீட்டாளருக்கு 2022 இன் முதல் அரையாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட 17 மருந்து விடயங்கள் தொடர்பான விடயங்களில் வெளிப்படுத்தப்பட்டன.

(a) கொள்வனவு செய்யப்பட்ட மருந்துகளுக்கிடையே ரூபா 14,979,403 பெறுமதியான 02 மருந்து விடயங்கள் பட்டியல் விலையில் அண்ணளவாக 17 சதவீதம் சேவைக் கட்டணம் அதாவது ரூபா 2,490,749 உழைத்து அவை மருந்து வழங்கல் பிரிவில் ரூபா 17,470,153 விலையில் விற்பனை செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் கூட்டுமுயற்சி கொள்வனவுகள் தொடர்பான இலாப கொள்கையான 06 சதவீத இலாபத்தை விஞ்சி 11 சதவீத இலாப வீதத்தின் அடிப்படையில் அந்த மருந்துகள் மருத்துவ வழங்கல் பிரிவிற்கு

உரிய 02 விடயங்கள் தொடர்பாக கவனத்தில் கொள்ளும் போது அரச மருந்தாக்கல் உற்பத்தி கூட்டுத்தாபனத்தின் மூலம் மருந்தது வழங்கல் பிரிவிற்கு விற்பனை செய்யும் போது 2020 ஒக்டோபர் 01 ஆம் திகதி காணப்பட்ட விலை குழுவின் அங்கீகாரத்தின் பிரகாரமே கவனத்தில் கொள்ளப்பட்டது. எனினும் உரிய கூட்டு முயற்சியாளர்கள் தமது விடயங்களை பட்டியல் இட்டு 2020 பெப்ரவரி 06 மற்றும் 10 ஆம் திகதிகளில் நடைபெற்ற விலை குழுவின் எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டே

அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட குழுவினால் பரிந்துரை செய்யப்பட்ட பிரகாரம் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளின் படி உரிய கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| | விற்பனை செய்யப்பட்டிருந்தது. இந்த விடயத்திற்காக உற்பத்தியாளரினால் கூட்டுத்தாபனத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட கிரய பத்திரத்தின் பிரகாரம் மேற்கூறப்பட்ட இருப்பின் மொத்த உற்பத்தி கிரயம் ரூபா 9,037,401 ஆக இருந்ததுடன், கூட்டு முயற்சி அதில் 65 சதவீதத்திற்கும் 66 சதவீதத்திற்கும் இடையிலான அதிக இலாப சதவீதத்தை உழைத்திருந்தமை வெளிப்படுத்தப்பட்டது. | பட்டியல் தயாரிக்கப்பட்டிருந்தது. | |
| (b) | கொள்வனவு செய்யப்பட்ட மருந்துகளுக்கு இடையே 13 இற்குரிய படடியல்களில் ரூபா 65,962,584 ஆக இருந்ததுடன், 17 – 26 சதவீத்திற்கு இடையிலான சேவைக் கட்டணமான ரூபா 11,058,498 சேர்க்கப்பட்டு அது மருந்து வழங்கல் பிரிவிற்கு ரூபா 77,021,082 தொகையில் விற்பனை செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் கூட்டுத்தாபனத்தால் 6 சதவீத இலாப வீதத்தை விஞ்சி 11 – 26 சதவீத்திற்கு இடையிலான அதிக இலாப சதவீதம் உழைக்கப்பட்டிருந்தது. உற்பத்தியாளரின் கிரய பத்திரத்தின் பிரகாரம் அந்த மருந்துகளின் கிரயம் ரூபா 69,934,852 ஆக இருந்ததுடன், கூட்டு முயற்சி 02 சதவீதம் முதல் 17 சதவீதத்திற்கு இடையிலான இலாப சதவீதத்தை உழைத்திருந்தமை மேலும் வெளிப்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் கூட்டுத்தாபனத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட கிரய | உரிய 17 மருந்து விடயங்கள் தொடர்பாக கவனத்தில் கொள்ளும் போது அரச மருந்தாக்கல் உற்பத்தி கூட்டுத்தாபனத்தின் மூலம் மருத்துவ வழங்கல் பிரிவிற்கு விற்பனை செய்யும் போது 2021 ஒக்டோபர் 05 ஆம் திகதி காணப்பட்ட விலைக் குழுவின் தீர்மானத்தின் அடிப்படையில் கவனத்தில் கொள்ளப்பட்டிருந்தது. எனினும், உரிய கூட்டு முயற்சி மூலம் பட்டியல்கள் 2021 ஏப்ரல் 05 ஆம் திகதி நடைபெற்ற விலைக்குழுவின் தீமானத்தின் பிரகாரம் காணப்பட்ட விலை எண்ணிக்கையில் பட்யடில் தயாரிக்கப்பட்டிருந்தது. | அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட குழுவினால் பரிந்துரை செய்யப்பட்ட பிரகாரம் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளின் படி உரிய கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பத்திரங்களின் சரியான தன்மை தொடர்பாக கூட்டுத்தாபனத்தால் பின்தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டமை கணக்காய்வின் போது ஏற்றுக் கொள்ள முடியாதிருந்தது. | | |
| (iii) | கூட்டு முயற்சி முன்மொழிவு திட்டத்தை அமுல்படுத்துவதற்காக அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட உத்தியோகபூர்வ குழுவினால் (Official committee) பரிந்துரை செய்யப்பட்ட பிரகாரம் முதலீட்டாளர்களின் உற்பத்தி செயற்பாடுகளின் தரக் கட்டுப்பாடு, முகாமைத்துவம் மற்றும் தொழில்நுட்ப உதவி கூட்டுத்தாபனத்தால் வழங்க வேண்டியிருந்ததுடன், அதற்காக அந்த முயற்சியின் பங்குகளில் 10 சதவீதம் கூட்டுத்தாபனத்திற்கு விநியோகிக்கப்படல் வேண்டும். எனினும், ஏழு முதலீட்டாளர்களினால் மாத்திரம் பங்கு விநியோகிக்கப்பட்டிருந்ததுடன், 2022 ஆம் ஆண்டின் போது கூட்டுத்தாபனம் கொடுக்கல் வாங்கல் மேற்கொண்ட முதலீட்டாளர்களால் உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்ட பிரகாரம் தமது பங்குகளில் 10 சதவீதம் கூட்டுத்தாபனத்திற்கு கணக்காய்வு திகதியான 2022 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் விநியோகிக்கப்பட்டிருக்கவில்லை. | பங்கு உரித்து சான்றிதழ் விநியோகிப்பதற்கு தேவையான ஆவணங்கள் தயாரிக்கப்படுகின்றது. | அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட உத்தியோகபூர்வ குழுவினால் பரிந்துரை செய்யப்பட்ட பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (iv) | கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் பெயர் குறிப்பிட்ட இரண்டு நிறுவனங்கள் அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனம் (SPMC) வியாபார பெயரின் கீழ் தற்போது வரையிலும் மருந்துகளை கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | அரச மருந்தாக்கல் உற்பத்தி கூட்டுத்தாபனத்துடன், (SPMC) உடன்படிக்கை செய்து பங்கு விநியோகித்த நிறுவனத்திற்காக பணிப்பாளர் பெயரிடப்பட்டுள்ளனர். தற்போது SPMC வியாபார பெயரின் கீழ் மருத்துவ வழங்கல் பிரிவிற்கு மருந்துகள் வழங்கப்படுகின்றது. | உற்பத்திக்கூடம் நிர்மாணித்து பூர்த்தி செய்து கூட்டு முயற்சியில் இருந்து மருந்துகளை கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன், ஏனைய கூட்டு முயற்சிகளின் உற்பத்திக்கூடத்தை நிர்மாணித்து பூர்த்தி செய்த உடன் அதன் உற்பத்திகளை கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (v) | 04 கூட்டு முயற்சிகள் கூட்டுத்தாபனத்திற்கு வழங்க வேண்டிய 10 சதவீத பங்கு உரித்துக்கு உரிய பங்குச் சான்றிதழ் கிடைத்திருந்ததுடன், இரண்டு வியாபாரங்களில் இருந்து மாத்திரம் 2023 ஆம் ஆண்டின் ஆரம்பம் முதல் கூட்டுத்தாபனம் மருந்துகளை கொள்வனவு செய்திருந்தது. | உற்பத்திக்கூட நிர்மாணித்தல் வேலைகள் மற்றும் மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் (NMRA) சான்றிதழ் பெற்றுக் கொள்ளல் போன்ற வேலை நடவடிக்கைகள் தற்போது பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன், 2023 ஆம் ஆண்டின் ஆரம்பம் முதல் மருந்துகள் கொள்வனவு செய்தல் மேற்கொள்ளப்படுகின்றது. | உற்பத்திக்கூடத்தை நிர்மாணித்தல் வேலைகள் மற்றும் மருந்து ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் (NMRA) சான்றிதழ் பெற்றுக் கொள்ளுதல் போன்ற வேலை நடவடிக்கைகள் தற்போது பூர்த்தி செய்யப்பட்டுள்ளமையால் 2023 ஆம் ஆண்டின் ஆரம்பம் முதல் மருந்துகளை கொள்வனவு செய்தல் வேண்டும். |

## 3.5 ஒப்பந்த நிர்வாகத்தில் குறைபாடு

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நாட்டில் காணப்படுகின்ற மருந்து உற்பத்தி செய்யப்படுகின்ற ஒரேயொரு உற்பத்தி நிறுவனமான இலங்கை அரசாங்க மருந்தாக்கல் உற்பத்தி கூட்டுத்தாபனத்தின் மூலம் உற்பத்தி செய்யப்படுகின்ற மருந்துகளுக்கான கோரிக்கையின் அடிப்படையில் அந்த உற்பத்தியின் அளவை அதிகரிப்பதற்காக மேற்கூறப்பட்ட அரசாங்க கூட்டுத்தாபனத்தின் உற்பத்தி வசதிகள் போதியளவாக இல்லாமையின் அடிப்படையில் ஹொரணை மில்லேவ பிரதேசத்தில் புதிய உற்பத்திக்கூடமொன்றை ஆரம்பிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்ததுடன் அரசாங்கத்தினால் நாட்டிற்கும், மக்களுக்கும் தேவையான மருந்துகள், ஏனைய மருத்துவ பயன்பாட்டுப் பொருட்கள் மற்றும் மருத்துவ உபகரணங்கள் நாட்டிற்குக் கொண்டு வருதல் (இறக்குமதி) என்பவற்றிற்காக கவனத்திற் கொள்ளக்கூடிய வெளிநாட்டு நிதி சதவீதமொன்றை செலவிடுவதற்கும் அவ்வாறு நேரடியாக வெளிநாட்டு முதலீட்டினை கவர்வதற்கும், ஏற்றுமதியின் மூலம் அந்நிய செலாவணியை உழைப்பதற்கும் மற்றும் இறக்குமதி மாதிரிகளின் மூலம் அந்நிய செலாவணியை சேமிப்பதற்கும் முடியுமான வகையில் இலங்கைக்கு பொருளாதார நலன்களை கொண்டுவரக்கூடிய வகையில் தொழிற்சாலையாக மருந்து உற்பத்திக் கைத்தொழிலை அறிமுகப்படுத்துதலின் மூலம் புதிய மருந்து உற்பத்திக் | மருந்து உற்பத்திக்கூடம் 05 தொகுதிகளை இனங்கண்டிருந்ததுடன் முதற்கட்டமாக 03 உற்பத்திக்கூடங்களை ஆரம்பிப்பதற்கும் இரண்டாவது கட்டத்தின் கீழ் ஏனைய உற்பத்திகூடங்களை திட்டமிடுவதற்கும் உத்தேசிக்கப்பட்டிருந்தது . இது தொடர்பாக 05 உற்பத்திக்கூடங்களுக்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. | நாட்டிற்கும், தேசத்திற்கும் ஒரு சிறந்த சேவையான இச் செயற்திட்டத்தை விரைவுபடுத்துவதற்காக முன்னுரிமை வழங்குதல் வேண்டும். |

கூடமொன்றை உருவாக்கி அரசாங்க மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனத்தின் இயலளவை அதிகரிப்பதற்கு லோட்டஸ் பாமா (Lotos Pharma) செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு 2021 மார்ச் 08 ஆம் திகதி அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்திருந்ததுடன் இதற்காக ஹொரணை மில்லேவத்த பிரதேசத்தில் 65 ஏக்கருக்கு அண்ணளவான காணி பிரதெசமொன்று ரூபா 322.4 மில்லியன் கிரயத்தில் உரித்தாக்கிக் கொள்ளப்பட்டிருந்தது. இந்த செயற்திட்டத்திற்காக 03 உத்தியோகத்தர்கள் ஒப்பந்த அடிப்படையில் சேர்க்கப்பட்டிருந்ததுடன் 2022.12.31 இல் உள்ளவாறு செயற்திட்டத்திற்கு அண்ணளவாக ரூபா 354.96 மில்லியன் செலவிடப்பட்டிருந்த போதிலும் இதுவரையிலும் இந்த செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் திட்டமிடப்பட்ட பிரகாரம் நிறைவேற்றாமையின் அடிப்படையில் மேற்கூறப்பட்ட பிரகாரம் நாட்டிற்கும், தேசத்திற்கும் சிறந்த சேவை போன்ற செயற்திட்டத்திற்காக முன்னுரிமை வழங்கி விரைவுபடுத்துவதற்கு சகல தரப்பினரும் நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன் தேசிய தேவையாக எழுந்துள்ள இந்த செயற்திட்டத்தை விரைவாக பூர்த்தி செய்து நாட்டிற்குத் தேவையான நலன்களைப் பெற்றுக் கொள்வதற்கு பணிப்பாளர் சபையும், ஏனைய பொறுப்புவாய்ந்த தரப்பினர்களும் கவனம் செலுத்த வேண்டியிருந்தது.

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | பூர்த்தி மருந்து இருப்புக்களை களஞ்சியப்படுத்துவதற்கு இரண்டு மாடி களஞ்சிய கட்டிடமொன்று | செயலாற்றல் காப்புறுதி மற்றும் முற்பணத்தை செலுத்துதல் பிணை முறியை நீடிப்பதற்கு | ஒப்பந்தத்தை மீண்டும் ஆரம்பித்ததன் பின்னர் ஒப்பந்த |

நிர்மாணிப்பதற்காக 2018 செப்டெம்பர் 21 ஆம் திகதி நிர்மாண நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் 2022 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் இந்த நிர்மாணங்களுக்காக ரூபா 44,739,833 தொகை செலவிடப்பட்டிருந்தது. ஆரம்ப உடன்படிக்கையின் பிரகாரம் 2019 ஆகஸ்ட் 21 ஆம் திகதி வரையில் நிர்மாண நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதும் பல்வேறு காரணங்களின் அடிப்படையில் நிர்மாணங்கள் தொடர்ச்சியாக தாமதமடைந்திருந்தது. மேலும் ஒப்பந்தகாரரால் ஒப்பந்த உடன்படிக்கை மீறப்படுமாயின் பெறுகை நிறுவனத்தை பாதுகாப்பதற்காக மதிப்பீடு செய்யப்பட்ட தொகையில் ஐந்து சதவீதத்திற்கு குறையாத தொகை செயலாற்றல் காப்பீடாக பெறவேண்டியிருந்ததுடன் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 5.4.8 வேலை: (ஆ) இன் பிரகாரம் அந்த வேலையை பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட திகதியில் அவர்களுக்கு 28 நாட்கள் செல்லுபடியாக இருத்தல் வேண்டும். எனினும் சமர்ப்பிக்கப்பட்டுள்ள செயலாற்றல் காப்பீடு 2022 செப்டெம்பர் 04 ஆம் திகதியின் பின்னர் காலாவதியாகியிருந்தது. கணக்காய்வு திகதி வரையிலும் வேலைகள் பூர்த்தி செய்யப்படாதிருந்த இந்த ஒப்பந்தத்தின் செயலாற்றல் காப்பீடும் முற்பண செலுத்துதல் பிணை முறியையும் நீடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

ஒப்பந்த கம்பனிக்கு எங்களால் 2022.09.27 ஆம் திகதிய கடிதம் மூலம் அறிவிக்கப்பட்ட போதும் ஒப்பந்தத்தின் விலை வேறுபாடுகள் மற்றும் அமைச்சின் பெறுகைக் குழுவின் தீர்மானத்தை வழங்கும் வரை செயற்திட்டம் கைவிடப்பட்டமையால் செயலாற்றல் காப்புறுதி மற்றும் முற்பண செலுத்தி பிணைமுறியை தற்காலிகமாக நாளதுவரையாக்குவதற்கு ஒப்பந்த கம்பனி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

நிர்வாக நடவடிக்கைகள் அரசாங்கத்தின் பெறுகை வழிகாட்டிக் கோவைக்கு இணங்க முறையாக மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் அந்தப் பணிகளை சரியாக முகாமைத்துவம் செய்வதற்கும், மேற்பார்வை செய்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

## 3.6 மனிதவள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| | கூட்டுத்தாபனத்தின் மனித வள முகாமைத்துவம் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளபடுகின்றன. | | |
| (i) | 2022 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு கூட்டுத்தாபனத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை 427 ஆக இருந்ததுடன் உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை 323 ஆகும். 2023 மார்ச் 31 ஆம் திகதி வரையிலும் உற்பத்தி செயற்பாடுகளில் மிகவும் முக்கிய பிரிவான மருந்துப்பொருள் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி பிரிவுகளினதும் தரக்கட்டுப்பாட்டு பிரிவினதும் பிரதான 02 பதவிகளை உள்ளடக்கிய முக்கியமான சில பதவிகளுக்கான ஆட்சேர்ப்புக்களை மேற்கொள்வதற்கு முடியாதிருந்தது. | அங்கீகாரம் கோரப்பட்டுள்ளது. | ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | அங்கீகரிக்கப்பட்ட 08 பதவிகளுக்காக ஆட்சேர்ப்பு நடைமுறை தயாரித்து முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு 2023 மே 25 ஆம் திகதி வரையிலும் தவறியிருந்த்து. | இந்த பதவிகளுக்காக ஆட்சேர்ப்பு நடைமுறை தயாரித்து முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | ஆட்சேர்த்தல் நடைமுறையை தயாரித்து முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்திற்காக எதிர்பார்க்கப்பட்ட பணிப்பாளர் சபை அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டின் செயல்நடவடிக்கைத் திட்டம் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் கீழ் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பணிப்பாளர் சபை அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | செயல்நடவடிக்கைத் திட்டம் மற்றும் உரிய ஆண்டிற்கான வருடாந்த பாதீட்டுடன் நிதி எதிர்வு கூறல்களை உள்ளடக்கி 2022-2026 கால எல்லைக்கான கூட்டிணைந்த திட்டம் (Corporate Plan) வரிசை அமைச்சின் செயலாளரால் அரச பொது முயற்சிகள் பணிப்பாளர் நாயகம் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட போதிலும் 2022 முதல் 2026 வரையிலான கால எல்லைக்காக கூட்டிணைந்த திட்டம் 2023 மே 04 ஆம் திகதி வரையிலும் பொது முயற்சிகள் பணிப்பாளரினால் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. கூட்டிணைந்த திட்டத்தின் பிரகாரம் காலப்பகுதியில் நிறைவேற்ற வேண்டிய செயற்பாடுகள் செயல்நடவடிக்கைத் திட்டம் (Action Plan) மூலம் வெளிப்படுத்தப்படுகின்றமையால் கூட்டிணைந்த திட்டம் அங்கீகரிக்காமையின் காரணமாக காலப்பகுதியின் செயற்பாடுகளின் செயலாற்றலை மதிப்பீடு செய்வதற்கு முடியாதிருந்தது. | 2023 ஆம் ஆண்டிற்குரிய கூட்டிணைந்த திட்டம் (Corporate Plan) மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டம் தற்போது எமது நிறுவனத்தின் மூலம் தயாரிக்கப்பட்டு அந்த நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. எனினும் அது பொதுத் திறைசேரியின் மூலம் மேலும் ஆய்வு செய்யப்பட்டு பல்வேறு திருத்தங்கள் செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | 2021 நவம்பர் 16 ஆம் திகதிய 01/2021 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்கள சுற்றறிக்கைக்கு இணங்க திட்டம் தயாரிக்கப்படல் வேண்டும். |